வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

இரண்டாந் தவணைப் பரீட்சை - 2019

தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் : 06 **நேரம் : 2 மணி**

பகுதி - I

மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

01. "வையகம் போற்ற வாழவேண்டும்" என்னும் தொடரில் வையகம் என்பதன் ஒத்த பதம்
1) தரணி 2) பாதாளம் 3) அகம் 4) ஆகாயம்

02. நரிகள் சங்கினொடு காகளம் இசைத்துவரும். காகளம் என்பதன் ஒத்த பதம்
1) குரங்கு 2) குளவி 3) வாத்தியம் 4) சத்தம்

03. ஐயம் இல்லாது கல்வி கற்கவேண்டும். ஐயம் என்பதன் எதிர்ப்பொருள்
1) சந்தேகம் 2) பிச்சை 3) தெளிவு 4) கேட்டல்

04. ஆண் குரங்கு கடுவன் என்பது போல ஆண் யானை
1) களிறு 2) பிடி 3) நாம்பன் 4) போத்து

05. அரிச்சந்திரன் நீதி தவறாது ஆட்சி செய்துவந்தான். நீதி என்பதன் எதிர்ப்பதம்
1) மறம் 2) தர்மம் 3) ஆரவாரம் 4) அநீதி

06. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை
1) 216 2) 90 3) 247 4) 95

07. ஓர் எழுவாயும் ஒரு பயனிலையும் கொண்டு அமையும் வாக்கியம்
1) கூட்டு வாக்கியம் 2) தனி வாக்கியம் 3) ஏவல் வாக்கியம் 4) கலப்பு வாக்கியம்

08. பாரதியார் சிறந்த புலவர். இவ்வாக்கியத்தில் எழுவாயாக அமைவது
1) புலவர் 2) பாரதியார் 3) சிறந்த 4) பாடல்

09. அவர்கள் பாடசாலைக்குச் சென்றார்களா? இதில் அவர்கள் என்பது
1) படர்க்கை ஒருமை 2) படர்க்கைப் பன்மை
3) முன்னிலை 4) முன்னிலை ஒருமை

10. பூந்தோட்டத்தில் மலர்களின் வாசம் கமகம என வீசியது. கமகம என்பது
1) அடுக்குத்தொடர் 2) அடுக்கிடுக்குத் தொடர்
3) இணைமொழி 4) இரட்டைக்கிளவி

11. நான் + ஐ என்பதை புணர்த்தி எழுதினால்
1) நீயை 2) என்னை 3) உன்னை 4) நானை

12. கேட்போனைச் சுட்டும் பெயர்
1) முன்னிலை 2) தன்மை 3) படர்க்கை 4) பயனிலை

www.lkeau.lk

மாதத்தின் முதல் வாரம் தரம் 06 தொடக்கம் 11 வரையான
தமிழ் மீடியம் வகுப்புக்கள் இலவசம்
விரும்பியவர்கள் பங்குபற்றலாம்

இதோ உங்களுக்கான அரிய சந்தர்ப்பம்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

Learn Easy கல்வி நிலையத்தில் நிகழ்நிலையாக

zoom Online class

76667-4945

அனைத்து வகுப்புகளுக்குமான அனுமதிக்கட்டணம் இலவசம்

Mobile	076667-4945
WhatsApp	+94 76667-4945
Viber	+94 76667-4945
Email	learneasy.lk@gmail.com
Web	www.learneasy.lk

Face book - https://www.facebook.com/learneasylk

வகுப்புக்கள் தொடர்பான மேலதிக தகவல்களை
மேலுள்ள இலக்கத்திற்கு
WhatsApp செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

13. புலவர்கள் பலர் சேர்ந்து பாக்கள் இயற்றினார்கள். புலவர்கள் என்பது
1) ஆண்பால் 2) பெண்பால் 3) பலர்பால் 4) ஒன்றன்பால்

14. ஐயோ பாவம் இவன் நல்லவனாயிற்றே இங்கு இடப்பட வேண்டிய நிறுத்தக் குறியீடு
1) காற்புள்ளி 2) வியப்புக்குறி 3) முக்காற்புள்ளி 4) அடைப்புக்குறி

15. மூடஆமை என்ற பாடலைப் பாடியவர்
1) பாரதியார் 2) கோகிலா
3) பெருஞ்சித்திரனார் 4) தமிழ்ச்செல்வன்

16. ப் + ஔ என்ற எழுத்துக்கள் சேருமிடத்து வரும் எழுத்து
1) பா 2) பை 3) பொ 4) பௌ

17. email (ஈமெயில்) என்ற சொல்லின் தமிழ் வடிவம்
1) மின்னஞ்சல் 2) தொலைநகல் 3) இணையம் 4) கணினி

18. பின்வருவனவற்றுள் சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்
1) வென்னீர் 2) தன்னீர் 3) கலாசாரம் 4) நாகரீகம்

19. இளைஞன் என்ற சொல்லின் எதிர்ப்பாற்சொல்லாக அமைவது
1) யுவதி 2) இளைஞி 3) இளையவள் 4) விதவை

20. பின்வரும் சொற்களில் பொதுப்பாலாக அமைவது
1) நோயாளி 2) வாலை 3) மாணவன் 4) சிறுமி

(20 x 2 = 40 புள்ளிகள்)

பகுதி - II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. 1. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றை தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக.
1. நான் விரும்பும் பெரியார்
2. உடைந்த நூலகத்தின் சுயசரிதை
3. சுற்றுச்சூழலைப் பேணுவோம்
4. நான் பார்த்து இரசித்த தேர்த்திருவிழா

(20 புள்ளிகள்)

02. உமது பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழா பற்றி கொழும்பிலிருக்கும் உமது நண்பருக்கு 50 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

03. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.
1. கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏழாம் மாதத்தில் நடத்தப்படும் விழா எது?
2. "குன்றென நிமிர்ந்து நில்" என்பதன் பொருள் யாது?
3. பாண்டிமாதேவி கண்ட கனவு யாது?
4. அமைப்பு அடிப்படையில் வாக்கியங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
5. ஒரு வாக்கியத்தில் வினைச்சொல்லின் செயற்பாட்டிற்கு உட்படும் பெயர்ச்சொல்லை எவ்வாறு அழைப்பர்?
6. "தந்தை மகனுக்கு எழுதிய கடிதம்" என்ற பாடத்தில் தமிழ்ச்செல்வன் வாழ்ந்த இடம் எது?
7. கொட்டாங்கச்சி என்று அழைக்கப்படுவது எது?

(7 x 2 = 14 புள்ளிகள்)

www.kedu.lk

LEARN EASY

KNOWLEDGE IS POWER

THE PIONEER IN ONLINE CLASSES

தரம் 6

2026

புதிய பிரிவு

பிரிவு 2

தமிழ்
செவ் : 8PM
சனி : 8PM

கணிதம்
திங் : 8PM
புதன் : 8PM

விஞ்ஞானம்
சனி : 6PM
ஞாயி : 6PM

வரலாறு
புதன் : 7PM
வெள் : 7PM

சிங்களம்
வியா : 7PM
ஞாயி : 8PM

ENGLISH
Tue : 6PM
Thur : 6PM

ICT
Wed : 6PM
Fri : 6PM

zoom

76667-4945

1 பாடம்	5 பாடங்கள்	7 பாடங்கள்
800/-	3,000/-	4,200/-
மாதம்	மாதம்	மாதம்

04. பின்வரும் சொற்கள் பெயராகவும் வினையாகவும் வருமாறு வாக்கியம் அமைக்குக.

1. துணி –
2. அரி –

(2 x 2 = 4 புள்ளிகள்)

05. பின்வரும் சொற்களுக்கு பொருள் எழுதுக.

1. ஏரி –
2. வனப்பு –
3. இறை –
4. விறல் –

(4 x 1 = 4 புள்ளிகள்)

06. பின்வரும் வாக்கியங்களை கூட்டு வாக்கியமாக எழுதுக.

நான் வயலுக்குச் சென்றேன்.
தம்பி வயலுக்குச் சென்றான்.

(1 x 2 = 2 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றிலுள்ள எழுத்துப்பிழைகளை நீக்கி சரியான வாக்கியம் எழுதுக.

1. ஆலயத்தில் மக்கல் எள்ளோறும் ஒன்றுகூடி வளிபட்டனர்.
2. விஞ்ஞானிகள் வின்வெலிக்கு ஓடத்தில் விறைந்து சென்றனர்.

(2 x 3 = 6 புள்ளிகள்)

www.lkedu.lk